

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 315 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 11 – செவ்வாய்க்கிழமை 25 ஜுன் 2024 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 315 : Thiruvalluvar Year - 2055 - Aani 11 - Tuesday 25 June 2024 - Dak 12 Pages ₹ 5.00


### சாலை வளர்ச்சி என்பது மிக முக்கியம்! வரும் இரண்டு ஆண்டுகளில்

# ரூ.4,000 கோடி செலவில் 10,000 கி.மீ. நீள சாலைகள் மேம்பாடு!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.6.2024) சட்டமன்றப் பேரவையில், “முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்” மூலம் கூடுதலாக மேலும் 10 ஆயிரம் கி.மீ நீளமுள்ள ஊரகச் சாலைகள் 4,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்று சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் அறிவிப்பு வெளியிட்டார்.

**சென்னை, ஜுன் 25-**

**“தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளை செயல்படுத்திட ரூ.4,000 கோடி செலவில் 10,000 கி .மீ. நீளச் சாலைகள் மேம்படுத்தப் படும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சட்டப் பேரவையில் 110-விதியின் கீழ் அறிவிப்பினை வெளியிட்டார்.**

சட்டமன்றப் பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கிராமப்புறச் சாலைகள் திட்டம் குறித்து சட்டமன்றப் பேரவை விதி 110ன் கீழ் அளித்த அறிக்கை வருமாறு:-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தமிழ்நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளைத் தொடர்ந்து மேம்படுத்தி வருகிறோம். நகரம், கிராமம் என்ற வேறுபாடுகள் இல்லாமல் அனைத்து வளர்ச்சிகளையும் வழங்கி வருகிறோம். அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்துச் சமூக வளர்ச்சி என்பதையே நமது திராவிட மாடல் அரசின் இலக்காகக் கொண்டு செயல்பட்டு வருகிறோம். இதில் சாலை வளர்ச்சி என்பது மிக, மிக முக்கியமானது. நகரம், கிராமம் என்ற வேறுபாடு இல்லாமல் சாலை மேம்பாட்டை தமிழ்நாடு அரசு செய்து வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள்.

**வறுமை ஒழிப்பில் முக்கிய காரணி!**

கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள், கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டு வறுமையை ஒழிப்பதில் முக்கியக் காரணியாக உள்ளன.

தமிழ்நாட்டில் சுமார் 1 இலட்சத்து 38 ஆயிரம் கிலோ மீட்டர் நீளமுள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் உள்ளன. ஊரகப் பகுதிகளில் உள்ள சாலைகளை மேலும் மேம்படுத்தும் விதமாக ஒரு புதிய அறிவிப்பை இப்போது நான் வெளியிட விரும்புகின்றேன்.

**வளர்ச்சிக்கு உதவுகிறது!**

ஊரகச் சாலைகளில் செய்யப்படும் முதலீட்டிற்கும் ஊரக மக்களின் நலனிற்கும் நேரடித் தொடர்பு உள்ளது. சாலைகளின் உட்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்துச் சேவைகளின் மேம்பாடு என்பது ஊரகப் பகுதிகளில் வணிகச் செயல்திறனை அதிகப்படுத்துகிறது. அதன்மூலம், இடுபொருள் செலவினைக் குறைத்து வேளாண் உற்பத்தியினை அதிகரித்து, ஊரக வளர்ச்சிக்கும் வழிவகுக்கிறது. தரமான சாலைகள், கிராமப்புற மக்களின் வருமான அளவினை உயர்த்துகிறது.

கல்வி, சுகாதாரம் போன்ற சேவைகளை வழங்கி, அறிவாற்றலைப் பரவலாக்கி, சமூக, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து வளர்ச்சியைத் துரிதப்படுத்த உதவுகிறது.

எனவேதான், பேருந்து செல்லக்கூடிய சாலைகள், குக்கிராமங்களை இணைக்கும் முக்கிய சாலைகள், பல்வேறு முக்கிய சேவைகளைக் கிராமங்களுடன் இணைக்கும் சாலைகள் போன்றவற்றை மேம்படுத்துவதற்கு நமது அரசு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது.

அதன்படி, கடந்த 13.01.2023 அன்று என்னால் சட்டப்பேரவையில் “முதல்வரின் கிராமச்சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்” என்ற புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

**8,120 கி.மீ. தூர சாலைப் பணிகள் நிறைவு!**

இந்தத் திட்டத்தின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 10,000 கி.மீ. நீளமுள்ள ஊராட்சி ஒன்றிய சாலைகள் மற்றும் கிராம ஊராட்சி சாலைகளை மேம்படுத்த 4,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன்படி தற்போது வரை 8,120 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊரகச் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்,

★ நபார்டு - ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதி,

★ பிரதம மந்திரி கிராமச் சாலைத் திட்டம்

**16,596 கி.மீ. நீள சாலை அமைக்க அனுமதி!**

★ நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராமங்களில் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின் கீழும், கடந்த 3 ஆண்டுகளில் மொத்தம் 16 ஆயிரத்தி 596 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மற்றும் 425 உயர் மட்ட பாலங்கள் அமைக்கத் திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மொத்த மதிப்பு 9 ஆயிரத்து 324 கோடியே 49 லட்சம் ரூபாய். இதனை தொடர்ந்து செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

வருகிற இரண்டு ஆண்டுகளில் “முதல்வரின் கிராமச் சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்” மூலம் கூடுதலாக மேலும் 10 ஆயிரம் கி.மீ நீளமுள்ள ஊரகச் சாலைகள் 4,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும் என்பதை இம்மாமன்றத்துக்கு மகிழ்ச்சியுடன் அறிவிக்க விரும்புகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

---

### 18வது மக்களவையின் முதல் கூட்டத்தொடர் தொடங்கியது!

# பிரதமர் மோடி, அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவியேற்பின் போது அமளி!

## கழக எம்.பி.க்கள் இன்று பதவி ஏற்பு!

*புதுடெல்லி, ஜுன் 25-*

18வது மக்களவையின் முதல்நாளான நேற்று பிரதமர் மோடியும் பா.ஜ.க. மற்றும் கூட்டணிக்கட்சி எம்.பிக்களும் பதவியேற்றுக் கொண்டனர். பிரதமர் மோடி மற்றும் அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவியேற்பின்போது இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் முழக்கமிட்டதால் அவையில் அமளி நிலவியது.

புதிய மக்களவையின் முதல் கூட்டத்தொடர் நேற்று தொடங்கியது. இந்தியா கூட்டணியைச் சேர்ந்த எம்.பி.க்கள் அனைவரும் கையில் அரசமைப்புச்சட்ட புத்தகத்துடன் ஒன்றாக அவைக்கு வந்தனர். எட்டாவது முறை எம்.பி.யாகியுள்ள காங்கிரஸ் கட்சியின் கொடிக்குன்னில் சுரேஷை தற்காலிக சபாநாயகராக தேர்வு செய்ய மறுத்து அவை மரபுகளை மீறிய ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் அனைவரும் முழக்கமிட்டனர். இதனால் அவை



கூடியதுமே சற்று நேரம் பரபரப்பு நிலவியது

இதைத்தொடர்ந்து புதிய எம்.பி.க்களின் பதவியேற்பு தொடங்கியது. முதல் உறுப்பினராக பிரதமர் மோடி பதவியேற்றுக்கொண்டார். அவருக்கு தற்காலிக சபாநாயகர் பர்த்ருஹரி மகதாப் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

அப்போது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிய அரசின் ஜனநாயக விரோதப்போக்கை கண்டித்து முழக்கமிட்டனர். அதற்கு எதிராக ஆளுங்கட்சியினரும் முழக்கமிட்டதால் சற்று நேரம் அவையில் அமளி நிலவியது.

பிரதமரை தொடர்ந்து, பா.ஜ.க. உறுப்பினர்கள் ஒவ்வொருவராக பதவியேற்றனர். கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவியேற்பின்போது நீட் தேர்வு முறைகேட்டைக் கண்டித்து இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் அனைவரும் முழக்கமிட்டனர். இதனால் மக்களவையில் மீண்டும் அமளி நிலவியது.

இதனிடையே தமிழ்நாட்டைச் சேர்ந்த எம்.பி.க்கள் அனைவரும் இன்று (செவ்வாய்க்கிழமை) பிற்பகலில் பதவியேற்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. முன்னதாக குடிய ரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பா.ஜ.க.வைச் சேர்ந்த பர்த்ருஹரி மகதாப்பிற்கு தற்காலிக சபாநாயகராக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

ஒன்றிய அரசு அளித்த உதவி தற்காலிக சபாநாயகர் பொறுப்பை ஏற்க காங்கிரசின் கொடிக்குன்னில் சுரேஷ் மற்றும் தி.மு.க.வின் டி.ஆர்.பாலு மற்றும் சுதீப் பந்தோபாத்யாயா ஆகியோர் மறுத்து விட்டனர்.

இது தொடர்பாக மக்களவை தி.மு.க. குழு தலைவர் டி.ஆர்.பாலு வெளியிட்டுள்ள அறிக்கையில், மக்களவையில் பிரதமர் மோடி உறுப்பினராக பதவியேற்றதும் உதவி தற்காலிக சபாநாயகராக பொறுப்பேற்க, காங்கிரசின் கொடிக்குன்னில் சுரேஷ் மற்றும் தாம், திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் சுதீப் பந்தோபாத்யாயா ஆகியோரின் பெயர்கள் அழைக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். உடனே தாம் எழுந்து சபாநாயகரிடம் இது தொடர்பாக தாம் அளித்த கடிதத்தை அவையில் வாசிக்குமாறு வலியுறுத்தியதாகவும் ஆனால் தற்காலிக சபாநாயகர் அக்கடிதத்தை படிக்க மறுத்துவிட்டார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இதையடுத்து கொடிக்குன்னில் சுரேஷ் உள்ளிட்ட 3 பேரும் தற்காலிக உதவி சபாநாயகர் பொறுப்பை நிராகரித்து விட்டதாகவும் டி.ஆர். பாலு எம்.பி. தெரிவித்துள்ளார்.

---

### சாதிவாரி கணக்கெடுப்பு! பேரவையில்

# ஒன்றிய பா.ஜ.க. அரசை வலியுறுத்தி தீர்மானம் கொண்டுவருவோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜுன் 25-**

**சட்டப் பேரவையில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சாதிவாரி கணக்கெடுப்பு குறித்து பா.ம.க. உறுப்பினர் கோ.க. மணிக்கு பதிலளித்துப் பேசும் போது “ஒன்றிய பா.ஜ.க. அரசு சாதிவாரிக் கணக்கெடுப்பை உடனே நடத்த வேண்டும்” என்றும் “நடப்புக் கூட்டத் தொடரிலேயே இதுகுறித்து நாங்கள் தீர்மானம் கொண்டு வருவோம்” என்றும் கூறினார்.**

சட்டமன்றப் பேரவையில், சாதிவாரி கணக்கெடுப்பு குறித்து பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் கோ.க.மணி அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நீங்கள் எந்தக் கூட்டணியில் இருக்கிறீர்கள் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தக் கூட்டணிக் கட்சியோடு பேசி, நாடு முழுவதும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி, அதற்குப்பிறகுதான் இதை அமல்படுத்த முடியும். ஏற்கெனவே, பீகார் மாநிலத்திலே இதுபோன்று கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, அது நீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்டிருக்கிறது. அதை இந்த நேரத்தில் உறுப்பினர் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய உறுப்பினர் கோ.க. மணி அவர்கள் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்திட வேண்டுமென இங்கே பேசி, அதற்கு நம்முடைய அமைச்சர் பெருமக்கள் உரிய விளக்கங்களை அளித்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு காண வேண்டுமென்று சொன்னால், சாதிவாரியான கணக்கெடுப்பு, மக்கள் தொகை கணக்கெடுப்புடன் ஒன்றிய அரசால் விரைந்து எடுக்கப்பட வேண்டும். அதற்காக இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவரலாம் என்று நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு கோ.க. மணி அவர்கள் ஆதரவு தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

---

### விக்கிரவாண்டி இடைத்தேர்தல்:

# கழக வேட்பாளர் அன்னியூர் சிவா வேட்பு மனு ஏற்பு!

*விக்கிரவாண்டி, ஜுன் 25-*

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் போட்டியிடும் தி.மு.க வேட்பாளர் அன்னியூர் சிவாவின் வேட்பு மனுவை தேர்தல் ஆணையம் ஏற்றுக்கொண்டது.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி தொகுதியில் அடுத்த மாதம் 10ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனுத் தாக்கல் கடந்த 14ஆம் தேதி தொடங்கி 21ஆம் தேதி நிறைவடைந்தது. இடைத் தேர்தலில் போட்டியிட தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவா உள்ளிட்ட 64 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்நிலையில் வேட்பு மனுக்கள் மீதான பரிசீலனை, விக்கிரவாண்டி தொகுதி தேர்தல் அலுவலகத்தில் நடைபெற்றது. தேர்தல் நடத்தும் அலுவலர் சந்திரசேகரன், 64 பேரின் வேட்புமனுக்களையும் பரிசீலனை செய்தார். அப்போது தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவின் வேட்புமனு உள்பட 29 பேரின் வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டதாகவும் 35 பேரின் வேட்புமனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

வேட்பு மனுக்களை திரும்பப் பெற நாளை கடைசி நாள் என அறிவிக்கப்பட்டுள்ளது. இடைத் தேர்தலில் போட்டியிடும் இறுதி வேட்பாளர் பட்டியலும் நாளை மாலை வெளியிடப்படுகிறது.